## வரையறுக்கப்பட்ட ஜயா கென்ரெய்னர் ரேர்மினல்ஸ் கம்பனி - 2016

---

வரையறுக்கப்பட்ட ஜயா கென்ரெய்னர் ரேர்மினல்ஸ் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்திறன் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. கணக்காய்வை மேற்கொள்வதற்காக பகிரங்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று எனக்கு உதவியாக இருந்தது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன்என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட ஜயா கென்ரெய்னர் ரேர்மினல்ஸ் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | |
| (i) | 5.1.2 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செயலாற்றல் குறிக்காட்டியொன்று அறிமுகப்படுத்தப்பட்டு செயலாற்றல் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 5.2.5 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபை அங்கீகரித்த பாதீடானது அதற்கு அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் 2016 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டிற்காக மேற்படி தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 7.2 ஆம் பிரிவு | நிறுவனத்தின் சகல பிரதான செயற்பாடுகளையும் மேவுகை செய்யும் வகையில் செயல் கைநூலொன்றை (Procedure Manual / System) தயாரித்திருக்கவில்லை. |
| (iv) | 9.3.1 ஆம் பிரிவு | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கம்பனியால் 91 பேரைக் கொண்ட பதவியொன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு, உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (v) | 9.12 ஆம் பிரிவு | மீளாய்வாண்டினுள் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற 04 நலன்புரி முன்மொழிவு திட்டங்களுக்காக ரூபா 1,604,731 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 77.6 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 36.8 மில்லியன் ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 40.8 மில்லியன் அதாவது 111 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக எண்ணெய் செயற்பாட்டு நடவடிக்கை வருமானம் ரூபா 34 மில்லியனால் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவிலான அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 81,119,462 ஆகக் காணப்பட்ட இலாபம் அதன் பின்னரான ஆண்டுகளின் போது தளம்படைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 77,651,525 ஆக இருந்தது. எவ்வாறெனினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் மீள சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 214,506,082 ஆகக் காணப்பட்ட நிறுவனத்தின் பங்களிப்பு தளம்பல் அடைந்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 199,852,023 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கம்பனியின் அகவிதிக்கமைய துறைமுக அதிகாரசபையின் விடயப் பொறுப்பு அமைச்சரால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் துறைமுக அதிகாரசபையினால் கம்பனிக்கு அவ்வப்போது கையளிக்கப்பட்ட பணிகள் மற்றும் இலக்குகள் மற்றும் நியதிகளின் பிரகாரம், கொழும்பு துறைமுகத்திற்கு கப்பல் எண்ணெய் விநியோகித்தல், மற்றும் முகாமைத்துவத்தினை பேணிச்செல்லல் நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும்.

நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு பணிகள் மூன்று வகைகளுக்குரிய கப்பல் எண்ணெய் ஏற்றுதல், இருப்பில் வைத்திருத்தல் மற்றும் தளமிறக்குதல் ஆவதுடன், அதற்குரிய மீளாய்வாண்டின் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளின் தகவல்கள் பின்வருமாறு.

**மெற்றிக் தொன் அலகுகள்**

| எண்ணெய் வகை | 2016 | | 2015 | | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுதல் | இறக்குதல் | ஏற்றுதல் | இறக்குதல் | ஏற்றுதல் | இறக்குதல் | ஏற்றுதல் | இறக்குதல் |
| ஐஎவ்ஓ 180 | 26,610 | 26,513 | 58,172 | 36,377 | 46,083 | 48,131 | 31,817 | 31,147 |
| ஆர்எவ்ஓ 380 | 378,300 | 386,345 | 347,143 | 338,750 | 226,153 | 243,460 | 185,377 | 179,001 |
| எம்ஜீஓ | 56,522 | 57,523 | 50,714 | 50,274 | 61,402 | 61,997 | 54,450 | 44,975 |
| **கூட்டுத்தொகை** | **461,432** | **470,381** | **436,029** | **425,401** | **333,638** | **353,588** | **271,644** | **255,123** |
| அதிகரிப்பு அலகுகள் | 25,403 | 44,980 | 102,391 | 71,813 | 61,994 | 98,465 | - | - |
| சதவீதம் | 6 | 11 | 31 | 20 | 23 | 39 | - | - |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஐஎப்ஓ 180 (IFO) வகையில் எண்ணெய் ஏற்றுதல் (Lording) 30 சதவீதத்தினாலும், கப்பல் எரிவாயு எண்ணெய் (MGO) வகையில் மற்றும் எச்எவ்ஓ (HFO) 380 வகை எண்ணெய் முறையே 11 சதவீதத்தாலும் 9 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.

(ii). 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டின் ஐஎப்ஓ (IFO) 180 வகையில் எண்ணெய் இறங்குதல் (Unloading) 27 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், கப்பல் எரிவாயு எண்ணெய் (MGO) வகை எண்ணெய் மற்றும் எச்எவ்ஓ (HFO) 380 வகையான எண்ணெய் இறங்குதல் 14 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

(iii). ஒட்டுமொத்த எண்ணெய் செயற்பாட்டு நடவடிக்கைகளை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, எண்ணெய் ஏற்றுதல் (Loading) 25,403 மெற்றிக் தொன்களால் அல்லது 6 சதவீதத்தினால் இறக்குதல் (Unloading) 44,980 மெற்றிக்தொன்களால் அல்லது 11 சதவீதத்தால் அதிகரித்திருந்தது

(iv). எண்ணெய் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக கம்பனியிடம் 13 கிணறுகள் காணப்பட்டதுடன், அவற்றுள் எச்எவ்ஓ (HFO) 380 களஞ்சியப்படுத்தும் 6 எண்ணெய்க் கிணறுகள் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் அதன் உச்சமான கொள்ளளவினை பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான 04 வருடக் காலப்பகுதியினுள் ஒட்டுமொத்த எண்ணெய் இறக்கும் பணிகள் 215,258 மெற்றிக் தொன்களால் அல்லது 84 சதவீதத்தினால் கிரமமாக அதிகரித்திருந்ததுடன், சராசரியான அதிகரிப்பு வேகம் வருடாந்தம் 71,753 மெற்றிக் தொன்களால் அல்லது 28 சதவீதமாகியிருந்தது. அதற்கமைய, எஞ்சிய வருடங்களினுள் கப்பல் எண்ணெய் களஞ்சியப்படுத்துவதற்கான கேள்வி தொடர்ந்தும் அதிகரிக்குமெனின் அந்த கேள்வியை பூர்த்தி செய்ய முடியாது என்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

## 5 உள்ளகக் கணக்காய்வு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவு மற்றும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (1) ஆம் பிரிவிற்கமைய, கணக்காய்வு குழு கூட்டப்பட்டு உள்ளகக் கணக்காய்வில் கண்டறியப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்குரிய பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டிய போதிலும், கம்பனி உள்ளக்க கணக்காய்வுப் பிரிவொன்றை தாபித்திருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாமை |
| (ஆ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்காமை. |